# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 10.06.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நான் மே 27 ஆம் தேதி குத்பாவில் திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பு மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றுகளின் அடிப்படையில் ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பின் தொடர்ச்சியைப் பற்றி கூறினேன். அப்போது நான் முஜத்தித்துகள் பற்றியும் சிலவற்றைக் கூற விரும்பினேன். ஆனால் கூற வந்த விஷயம் விரிவுரையை நாடியதாகவும் மேலும் சில ஆதாரங்களைத் திரட்ட வேண்டியது இருந்த காரணத்தால் அப்போது கூற முடியவில்லை. அதனைப் பற்றி நான் இன்று கூறுவேன்.

சில நாட்களுக்கு முன் வக்ஃபே நவ் வகுப்பில் ஒரு பையன் வருங்காலத்தில் முஜத்தித்துகள் வர முடியுமா என்று கேள்வி கேட்டான். அப்போது எனக்கு சிந்தனை வந்தது. இது சில வீடுகளில் எழக்கூடிய கேள்விகளாகும். ஏனென்றால் சிறு பிள்ளைகளுக்கு இதுபோன்ற கேள்விகள் கேட்பதற்கான சிந்தனை வராது. அல்லது ஜமாஅத் பிள்ளைகளிடமும், இளைஞர்களிடமும் அமைதியின்மையை ஏற்படுத்த விரும்புபவர்கள் இதுபோன்ற கேள்விகளைக் கேட்க வைப்பார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸில் அடிப்படையில், ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முஜத்தித்துகள் வருவார்கள் என்று கூறியுள்ளார்கள். ஜமாஅத்தில் பல சமயங்களில் இந்தக் கேள்வி எழுந்துள்ளது. ஜமாஅத்தில் உள்ள நல்ல மனிதர்கள் சார்பாக அல்ல; மாறாக ஜமாஅத்தில் பிளவை ஏற்படுத்த முயல்பவர்கள் சார்பாக இதுபோன்ற கேள்விகள் கேட்கப்பட்டு வருகிறது.

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் பல சந்தர்ப்பங்களில் இதற்கு விளக்கமளித்துள்ளார்கள். பிறகு மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடைய காலகட்டத்திலும் இந்த கேள்வி மிகவும் ஆரவாரத்துடன் கேட்கப்பட்டது. இதனைப் பற்றி ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் பல சந்தர்ப்பங்களிலும் தனது குத்பா உரைகளிலும் திருப்திகரமான அளவிற்கு விளக்கமளித்துள்ளார்கள். பிறகு நான்காவது கிலாஃபத்தின் காலகட்டத்திலும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம் இதனைப் பற்றி கேட்கப்பட்டது.

எனவே இது ஒவ்வொரு காலகட்டத்திலும் எழக்கூடிய விஷயமாக இருக்கிறது. இதைப் பற்றி உள்ளங்களில் கேள்விகள் எழும்புகின்றன; எழும்பிக் கொண்டு தான் இருந்திருக்கின்றன. மேலும் நயவஞ்சகர்களின் நோக்கம் எப்படியாவது ஜமாஅத்தில் அமைதியின்மையை ஏற்படுத்த வேண்டும் என்பதாகவே இருக்கிறது. கிலாஃபத் மற்றும் முஜத்தித்தில் என்ன வித்தியாசம் இருக்கிறது? இதனைப் பற்றி பொதுவாக சாதுரியமாக அறிவைப் பெற வேண்டும் என்ற சாக்குப்போக்குகளைக் கூறிக் கொண்டு இந்த விஷயம் பேசப்படுகிறது. ஆனால் அவர்களுடைய எண்ணம் வேறொன்றாக இருந்தது என்பது பிறகு தெரிய வருகிறது. குறிப்பாக மூன்றாவது கிலாஃபத்தில் இது நிரூபணமானது. மேலும் அதன் பின்னணியில் ஒரு குழப்பம் இருந்தது.

ஆனால் எவ்வாறிப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகும், அவர்களுடைய கிலாஃபத் தொடர்ச்சியிலும் அல்லாஹ் தனது வல்லமையின் கரத்தை நீட்டுவதாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான்.

எவ்வாறென்றால், எப்போதெல்லாம் ஜமாஅத்தில் குழப்பங்கள் எழுந்தனவோ அல்லாஹ் தனது அருளால் அதனை தீர்த்து விட்டான். ஏனென்றால் அதிகப்படியான ஜமாஅத்துகள் அவர்களுடன் இணையவில்லை. ஆனால், இன்று இந்தக் குழப்பம் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்கு கஷ்டத்தைக் கொடுத்தது போன்று இல்லை. இருந்தாலும் ஒரு சில சமயங்களில் இதுபோன்ற கேள்விகள் எழுந்து கொண்டு தான் இருக்கின்றன. ஆகையால் இதற்கான சில விளக்கத்தைக் கூறுகின்றேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸில், ஒவ்வொரு நூற்றாண்டிலும் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக முஜத்தித்துகள் தோன்றுவார்கள் என்று கூறப்பட்டதில் சந்தேகம் இல்லை. மேலும் இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ள வார்த்தை ஒருமையாக இருந்தாலும் அது பன்மையையும் குறிக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை தனது உண்மைத்துவத்திற்கு ஆதாரமாகக் கூறியுள்ளார்கள். தற்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை உங்கள் முன் வைக்கிறேன். இதனைப் பற்றி அன்னாருடைய கூற்றுகள், எழுத்துக்கள் பல உள்ளன. அதனைக் கூறுவது சாத்தியமற்றதாகும். இருந்தபோதிலும் நான் கூறியது போன்று ஒரு சில மேற்கோள்களை உங்கள் முன் வைக்கிறேன்.

இதனைக் கவனமாகப் பார்த்தால் வருங்காலத்தில் வரக்கூடிய முஜத்தித்தீன்கள் பற்றிய விஷயம் தெளிவாகி விடும்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

இறைவன் இஸ்லாத்துடன் அவ்வாறு செய்யவில்லை. ஏனென்றால் இந்த தோட்டம் எப்போதும் பசுமையாக இருக்க வேண்டும் என விரும்பினான். எனவே ஒவ்வொரு நூற்றாண்டிலும் இந்தத் தோட்டத்திற்கு புதிதாக நீர் ஊற்றினான். மேலும் இதனை காய்ந்து போவதிலிருந்து காப்பாற்றினான். ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு இறை அடியார் எப்போதெல்லாம் சீர்திருத்தத்திற்காக வந்தாரோ, அப்போதெல்லாம் அறிவீனர்கள் அவரை எதிர்த்தனர். அவர்களின் பழக்கத்தில் இருக்கக்கூடிய சம்பிரதாயங்களிலிருந்து சீர்திருத்தம் பெறுவது அவர்களுக்கு விரும்பத் தகாததாக இருந்தது. கூச்சலிடக் கூடியவர்கள் கூச்சலிடவும் செய்தார்கள். எதிர்ப்பும் தெரிவித்து வந்தார்கள. ஆனால் இறைவன் தனது நடைமுறையை விடவில்லை.

எந்த அளவுக்கு என்றால் இந்த இறுதிக் காலகட்டத்தில் நேர்வழி மற்றும் இருளுக்கு இடையிலுள்ள இறுதிப்போரில் இறைவன் பதினான்காம் நூற்றாண்டின் மற்றும் இறுதி ஆயிரமாவது ஆண்டின் ஆரம்பத்தில் முஸ்லிம்களைக் கவனமற்றவர்களாய் கண்டு மீண்டும் தனது வாக்குறுதியை நினைவு கூர்ந்தான். மேலும் இஸ்லாம் மார்க்கத்தை புதுப்பித்தான். ஆனால் மற்ற மார்க்கங்களுக்கு, நமது நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஏற்பட்ட இந்த புதுப்பித்தல் ஒருபோதும் கிடைக்கவில்லை. எனவே அவை அனைத்தும் மரணித்து விட்டன. அவற்றில் ஆன்மீகம் எஞ்சியிருக்கவில்லை. அவற்றில் பல தவறுகள் அதிக அழுக்குகளைக் கொண்ட துவைக்காத துணியைப்போல ஒட்டிக் கொண்டன. மேலும் ஆன்மீகத்தில் எந்தவித கவனமும் இல்லாத மனிதர்களை அவர்களுடைய நஃப்ஸே அம்மாரா (தீமையைத் தூண்டக்கூடிய ஆன்மா) உலக வாழ்க்கையிலிருந்து தூய்மையானதாக இல்லாமல் தனது மன இச்சைகளுக்கேற்ப இந்த மதங்களில் தேவையில்லாமல் புகுந்து அவர்களை எந்த அளவுக்கு சீர்குலைத்து விட்டன என்றால் அவை வேறு விதமாகக் காட்சி அளிக்கின்றன.

எனவே தெளிவாகக் கூறுகின்றார்கள். அல்லாஹ் இஸ்லாத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த ஒளியைப் பிரகாசிப்பதற்காக பல சந்தர்ப்பங்களில் பல அவ்லியாக்கள், முஜத்தித்துகளை தோற்றுவித்தான். அவர்கள் தத்தமது சுற்று வட்டாரத்தில் மார்க்கத்தின் ஒளியைப் பரப்பினார்கள்.

ஏனென்றால் இந்த மார்க்கத்தை அல்லாஹ் நிலைநாட்ட விரும்பினான். ஆனால் மற்ற மார்க்கங்களுக்கு இவ்வாறு எந்த விதமான பாதுகாப்பும் கிடையாது. இதனால் அதில் பல பித்அத்துகள் தோன்றி அவை சீர்கெட்டுப் போய் விட்டன.

**மேலும் கூறுகின்றார்கள்:**

எல்லா இடங்களிலும் இதனைப் போன்ற நிலைதான் உள்ளது. ஒவ்வோரிடத்திலும் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். இதற்காகத்தான் இறைவன் இந்தக் காலகட்டத்தில் மஸீஹ் மவ்வூது என்று பெயரிடப்பட்ட முஜத்தித்தை அனுப்பியுள்ளான். அவருடைய எதிர்பார்ப்பு பல காலங்களாக இருந்து வருகிறது. எல்லா நபிமார்களும் அவரைப் பற்றி முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். இதற்கு முன்பு இருந்த சான்றோர்கள் இவருடைய காலகட்டத்தில் இருக்க வேண்டுமே என ஆசைப்பட்டார்கள்.

இங்கு எந்த முஜத்தித்தைப் பற்றி அன்னார் கூறுகின்றார்களோ அந்த முஜத்தித் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே ஆவார்கள். இவரைத் தான் எதிர்பார்த்து இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைத் தவிர வேறு எந்த முஜத்தித் பற்றியும் எதிர்பார்ப்பு இருந்ததேயில்லை. இதனைப் பற்றி முந்தைய நபிமார்களும் கூறியிருக்கிறார்கள்; முன்னறிவிப்பு செய்திருக்கிறார்கள். ஏனென்றால் அன்னாருடைய காலகட்டம் கடைசி காலகட்டமாகும். இதில் மார்க்கத்தைப் பரப்ப வேண்டும்; அல்லாஹ்வின் மார்க்கம் முழு உலகிலும் பரவ வேண்டும்; அவனது தூதுச் செய்தி முழு உலகிலும் பரவ வேண்டும்.

**மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:**

இறைவன் இந்தக் காலகட்டத்தின் நிலையைப் பார்த்து, பூமியைப் பலவிதமான கூச்சல் குழப்பத்தில் கண்டு, என்னை உண்மையின் தப்லீக் மற்றும் சீர்திருத்தத்திற்காக அனுப்பி இருக்கிறான்.

இங்கு வார்த்தையைக் கவனியுங்கள். உண்மையின் தப்லீக் மற்றும் சீர்திருத்தத்திற்காக அனுப்பியுள்ளான். மேலும் இந்தக் காலகட்டம் பதிமூன்றாம் நூற்றாண்டு முடிவடைந்து பதினான்காம் நூற்றாண்டு ஆரம்பமாகி இருந்தது. அப்போது இறை கட்டளைக்கேற்ப பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவும், உரைகள் மூலமாகவும், பிரசுரங்கள் மூலமாகவும் இந்த நூற்றாண்டில் இறைவன் புறமிருந்து மார்க்கத்தைப் புதுப்பிக்க வர வேண்டியவர் நான் தான் என்று குரல் கொடுக்க ஆரம்பித்தேன். இதன் மூலம் பூமியிலிருந்து சென்ற ஈமானை மீண்டும் நிலை நிறுத்துவேன். இது முஜத்தித் உடைய பணியாகும். உண்மையின் தப்லீக் மற்றும் சீர்திருத்தம் பூமியிலிருந்து சென்ற ஈமானை நிலைநாட்டுவது போன்ற இதனைப் பற்றி முன்பே கூறப்பட்டுள்ளது. பூமியிலிருந்து சென்ற ஈமான் காணாமற் போவது பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பு உள்ளது. அதாவது ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் பாரசீக வம்சத்திலிருந்து ஒரு மனிதர் வருவார். அவர் அதனை மீண்டும் பூமிக்கு கொண்டு வருவார்.

**பிறகு கூறுகின்றார்கள்:**

இறைவனிடமிருந்து ஆற்றல் பெற்று அவனுடைய கையின் ஈர்ப்பின் மூலம் உலகத்தை சீர்திருத்தி இறையச்சம், நேர்மையின் பக்கம் இழுத்து அவர்களுடைய தவறானை நம்பிக்கையினையும் தீய நடத்தையையும் அகற்றுவேன். இதில் சில வருடங்கள் கழிந்த பிறகு இறைவனுடைய வஹியினின் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்து இந்த உம்மத்திற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இஸ்லாத்தின் வீழ்ச்சி மற்றும் இருள் பரவிய காலகட்டத்தில் நேரடியாக இறைவனிடமிருந்து ஹிதாயத் பெறக்கூடிய கடைசி மஹ்தி, இறை நியதிக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டவர், இவரைப் பற்றி இன்றிலிருந்து 1300 வருடங்களுக்கு முன்பு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்டவர் நானே ஆவேன்.

எனவே அன்னாருடைய அந்தஸ்த்து முஜத்தியத் மட்டும் கிடையாது. மாறாக மஹ்திய்யத் மற்றும் மஸீஹிய்யத்துடைய அந்தஸ்தும் ஆகும். இதன் காரணமாக நுபுவ்வத் அந்தஸ்த்தும் இருக்கிறது.

**மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:**

மஹ்தி உடைய காலகட்டம் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்கான காலகட்டம் என்பதில் யாருக்கு மறுப்பு இருக்க முடியும்? சூரிய சந்திர கிரகணம் அன்னாருடைய உண்மைக்கு அடையாளமாகும். எனவே அந்த அடையாளங்கள் வெளிப்பட்டு விட்டன. ஏற்றுக் கொள்பவர் ஏற்றுக் கொள்ளட்டும். இந்த சூரிய சந்திர கிரகணங்களைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். வானம், பூமி படைக்கப்பட்டதிலிருந்து இந்த அடையாளம் எவருக்காகவும் வெளிப்பட்டதில்லை. இது நமது மஹ்தியுடைய அடையாளமாகும். அந்த மஹ்தியுடைய அந்தஸ்து மிகவும் உயர்வானதாகும். வெறும் முஜத்தியத் அந்தஸ்து மட்டும் கிடையாது. மாறாக மிகவும் உயர்வான அந்தஸ்து ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பதினான்காம் நூற்றாண்டின் முஜத்தித் மட்டும் கிடையாது. மாறாக மஸீஹும் மஹ்தியும் ஆவார்கள் என்பதை மற்றவர்கள் முன்பு எடுத்து வைப்பது அவசியமாகும். எவ்வாறிருந்தபோதிலும் அன்னார் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். நேர்வழிக்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். ஆனால் அன்னாருடைய அந்தஸ்து மிகவும் உயர்வானது. முஜத்திய்யத்தை விட மிகவும் உயர்வான அந்தஸ்தாகும். எனவே அன்னார் பதினான்காம் நூற்றாண்டின் முஜத்தித் நான் ஆவேன் என்று கூறியுள்ளார்கள். நான் கூறியது போன்று இந்த அஸ்தஸ்தின் காரணத்தினால் நுபுவ்வத்துடைய மேன்மை கிடைத்தது.

**மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:**

அறிந்து கொள்ளுங்கள். பொதுவாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக அறிவிக்கப்பட்ட இந்த ஹதீஸ் நிரூபணமாகிறது. அதாவது இறைவன் ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தனது மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக முஜத்தித்துகளை தோற்றுவித்துக் கொண்டே இருப்பான்.

பதினான்காம் நூற்றாண்டுக்குரிய நற்செய்திக்கேற்ப உண்மையான மஹ்தி பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றுவார் என்று எந்த அளவுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் இருக்கின்றதென்றால் உண்மையைத் தேடுபவர்கள் அதனை ஒருபோதும் மறுக்க முடியாது.

**மேலும் கூறுகின்றார்கள்:**

இறைவன் இந்த நபியை அதாவது முழுமையான முஜத்தித்தை இக்காலகட்டத்தில் இஸ்லாத்தைத் தவிர மற்ற மார்க்கங்களும் மற்ற போதனைகளும் வீணானவை என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காகத்தான் அனுப்பி இருக்கிறான்.

எனவே இதுதான் அன்னாருடைய அந்தஸ்து ஆகும். மிகவும் உன்னதமான முழுமையான முஜத்தித் ஆவார்கள்.

**அன்னார் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய கிலாஃபத் அல்லது முஜத்தியத் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடன் நிறைவு பெற்றது. ஆனால் இஸ்லாத்தின் போதனைகளை புத்துணர்வுடன் வைப்பதற்காக ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித்துகள் தோன்றுவார்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருக்கிறார்கள். இதன் மூலமாக நூறு வருடத்தில் மார்க்கத்தில் கலந்துள்ள

பித்அத்துகளையும் தீமைகளையும் அகற்றி மார்க்கத்தில் சீர்திருத்த வேண்டியவைகளை சீர்திருத்தவும் குறைபாடுகளைக் களையவும் வேண்டும்.

மேலும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளைத் தொடரவும், இதனை அதன் அசல் நிலையில் வைப்பதற்கும் முஜத்தித்துகள் வந்து கொண்டிருந்தார்கள். இதற்கு இஸ்லாமிய வரலாறு சான்றாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதிரிகளை நோக்கிக் கூறுகின்றார்கள்:**

ஆரம்ப காலகட்டத்தில் முஜத்தித்துகள் வந்தார்கள் என்றால் இந்த நூற்றாண்டில் ஏன் வரவில்லை. இந்த நூற்றாண்டிலும் முஜத்தித் வர வேண்டும். இதன் காரணத்தால் நாம் அனைத்து மேற்கோள்களையும் படிக்க வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: என்னைத் தவிர இந்தக் காலகட்டத்தின் முஜத்தித் என்று யாரும் வாதிடவில்லை. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பிற்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானே ஆவேன். மேலும் மஸீஹ் மவ்வூதிற்கு நபி என்ற அந்தஸ்து கிடைத்துள்ளது. எனவே முழுமையான முஜத்தித் பதினான்காம் நூற்றாண்டின் முஜத்தித் என்ற அந்தஸ்தினாலும், மஸீஹ் மஹ்தி என்ற அந்தஸ்தினாலும் மிகப்பெரிய முஜத்தித் ஆவார். இதனைப் பற்றி முந்தைய நபிமார்களும் எழுதியுள்ளார்கள். எனவே இதுதான் அன்னாரின் மேன்மையாகும். அன்னாருடைய மேன்மையையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது கிலாஃபத் பற்றிய கூறப்பட்ட ஹதீஸையும் முன்வைத்தால் வருங்காலத்தில் வரக்கூடிய முஜத்தியத் பற்றிய விஷயத்திற்கு தீர்வு கிடைத்து விடும். மாறாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மிகத் தெளிவான இன்னோர் மேற்கோள் உள்ளது. அன்னார் லெக்சர் ஸியால்கோட்டில் ஓரிடத்தில் கூறுகின்றார்கள். இறைவனிடமிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று கூறக்கூடிய இந்த இமாம் அவர் நூற்றாண்டின் முஜத்தித்தும், கடைசி ஆயிரமாவது ஆண்டின் முஜத்தித்தும் ஆவார். இதற்கு அன்னார் விளக்கம் எழுதுகின்றார்கள்:

நமது ஆதமின் காலகட்டம் ஏழாயிரம் வருடங்கள் ஆகும். ஆனால் நாம் தற்போது கடைசி ஆயிரமாவது ஆண்டில் இருக்கிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதற்கு முன்பு இருந்த ஓராயிரம் வருட காலத்தை இருண்ட காலம் என கூறியிருக்கிறார்கள். பிறகு பதினான்காம் நூற்றாண்டில் மஸீஹ் மஹ்தி தோன்றுவார் என்று கூறியிருக்கிறார்கள். பிறகு மஸீஹ் மவ்வூது தோன்றுவதன் மூலம் இஸ்லாத்தில் இரண்டாவது மறுமலர்ச்சி ஏற்படும். அந்த இருண்ட ஓராயிரம் ஆண்டில் பல முஜத்திதுகக்ள தோன்றினார்கள். பல இடங்களில் முஜத்திதுகள் தோன்றினார்கள். ஆனால் அவர்களுடைய அந்தஸ்து சின்னச்சின்ன விளக்குகளைப் போன்றதாகும். அது தனது பகுதிகளை ஒளியூட்டியது. தனது காலம் மற்றும் தனது நூற்றாண்டு வரை மட்டும் இருந்தது. மேலும் ஒரே சமயத்தில் பல முஜத்திதுகள் தோன்றினார்கள். ஆனால் கடைசி ஆயிரம் ஆண்டுக்கு முஜத்தித் என்ற பெருமை அன்னாருக்கு மட்டும்தான் கிடைத்துள்ளது. அவர்களின் பெருமை வெறும் நூறு ஆண்டுகளுக்கு முஜத்தித் என்பதல்ல. மாறாக 1000 வருடங்களுக்கான முஜத்தித்தாக இருப்பதாகும். ஏனென்றால் இது உலகத்தின் கடைசி 1000 வருடங்கள் ஆகும்.

**மேலும் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இது கடைசி ஆயிரம் ஆண்டு ஆகும். எனவே இறுதிக்காலத்தின் இமாமும் இதன் ஆரம்பத்தில் தோன்றுவது அவசியமாகும். ஆனால் அவருடைய நிழலாக வருபவரைத் தவிர – அவரைப் பின்பற்றுபவரைத் தவிர இதற்குப் பிறகு வேறெந்த இமாமும் கிடையாது. மஸீஹும் கிடையாது. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித்துகள் வந்து கொண்டிருக்கிறார்கள்; வரவும் முடியும். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ்

மவ்வூது (அலை) அவர்களின் நிழலாக அன்னார் எந்த நிழலைப் பற்றி அடையாளம் காட்டினார்களோ அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸிற்கு இணக்கமாகவும் உள்ளது. அந்த ஹதீஸ் இதுவாகும்.

**ஹஸ்ரத் ஹுதைபா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

உங்களில் இறைவன் நாடும் வரை நுபுவ்வத் இருக்கும். பிறகு தான் விரும்பும் போது அதனை எடுத்துக் கொள்வான். பிறகு எப்போது வரை நாடுவானோ அதுவரை நுபுவ்வத் வழியில் கிலாஃபத் இருக்கும். பிறகு நான் விரும்பும் போது அதனையும் எடுத்துக் கொள்வான். பிறகு அநீதியிழைக்கக்கூடிய அரசுகள் இறைவன் நாடும் வரை இருக்கும். பிறகு தான் விரும்பும்போது அதனையும் எடுத்துக் கொள்வான். பிறகு அதனைவிட அதிகக் கொடுமையிழைக்கக்கூடிய கொடுங்கோல் மன்னர் ஆட்சி இருக்கும். அதுவும் இறைவன் நாடும் வரை இருக்கும். பிறகு தான் விரும்பும்போது அதனையும் எடுத்துக் கொள்வான். பிறகு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் உண்டாகும் என்று கூறியவாறு பிறகு அன்னார் அமைதியாகி விட்டார்கள்.

எனவே நுபுவ்வத் வழியில் கிலாஃபத் அமைந்து விட்டால், அதுதான் உண்மையில் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்கான பணியைச் செய்வதாக அமையும். ஏனென்றால் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்று என்னவென்றால், நான் இறைவன் புறமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டிருக்கின்றேன். மேலும் நான் இறைவனது முழுமையான வல்லமை ஆவேன். எனக்குப் பிறகு சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இரண்டாவது வல்லமையின் தோற்றமாவார்கள். அன்னார் இரண்டாவது வல்லமையின் உதாரணமாக ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களைக் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு அவர்களை எழுப்பி அல்லாஹ் தனது இரண்டாவது வல்லமையை வெளிப்படுத்தினான்.

எனவே கடைசி ஆயிரம் வருடத்தன் முஜத்தித் ஆகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம்தான், ஹதீஸின் அடிப்படையில் நுபுவ்வத் வழியில் கிலாஃபத் தோன்றும். முஜத்திதிற்கான வேலையாகிய மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்கான வேலையை கிலாஃபத் தொடர்ந்து செய்து வரும். தர்பிய்யத், சீர்திருத்தம், தப்லீக் வேலைகள் அனைத்தும் கிலாஃபத் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாம் கடந்த 103 வருடங்களாக இதனைக் காண்கிறோம்.

எனவே ஹதீஸின் அடிப்படையிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கூற்றின் அடிப்படையிலும் எவராவது முஜத்தித் என்று அறிவிப்பு செய்தால், அதற்கான நிபந்தனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பின்பற்றக் கூடியவராக இருக்க வேண்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அறிவித்த இரண்டாவது வல்லமையின் தோற்றமாகத் திகழ வேண்டும். ஒருவேளை இறைவன் நாடினால் இரண்டு நூற்றாண்டுகள் இணையும் போது முஜத்திதிற்கான அந்தஸ்தை அப்பொழுது கலீஃபாவாக இருக்கக்கூடியவருக்கு கொடுக்க முடியும். மேலும் அவர் மூலமாக அறிவிப்பையும் செய்ய முடியும்.

ஏனென்றல் உம்மத்தில் முஜத்தித்துகள் தோன்றிக் கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். சில முஜத்தித்துகள் இறந்து பிறகுதான் மக்கள் அவரை முஜத்தித் என்று கூறியுள்ளார்கள். ஒரு முஜத்தித் தன்னைப் பற்றி அறிவிப்பு செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. அல்லாஹ் நாடினால் முஜத்திதிற்கான அறிவிப்பை நான்தான் முஜத்தித் என்று அந்த கலீஃபா மூலமாக செய்ய முடியும்.

மேலும் இதனையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு கலீஃபாவும் தமது காலத்தில் முஜத்தித் ஆக இருக்கிறார். ஏனென்றால் நபியுடைய மஸீஹுடைய வேலையைத் தான் அவர் தொடர்ந்து செய்து வருகிறார். முஜத்தித் ஆக இருப்பதைப் பற்றி அறிவிப்பு செய்தாலும் சரி, செய்யா விட்டாலும் சரி

முஜத்தித்திற்கான அறிவிப்பு செய்வதன் மூலமாகவோ அல்லது முஜத்தித் ஆவதாலோ கிலாஃபத்தின் அந்தஸ்து உயராது. மாறாக கிலாஃபத்தின் அந்தஸ்து தான் முதலில் உள்ளது.

நான் கூறியது போன்று ஒவ்வொரு கலீஃபாவும் முஜத்தித் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று பித்அத்துகளை ஒழிப்பவர், அசல் போதனைகளை நிலைபெறச் செய்பவர், சீர்திருத்த முயற்சி செய்பவர், தப்லீக் பணிக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துபவர் என்பதாகும்.

எனவே இந்த வேலைகள் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் கீழ் நடந்து கொண்டு தான் இருக்கிறது. மாறாக இந்த வேலை கிலாஃபத் அமைப்பின் கீழ் முபல்லிக்குகள் தவிர பல அஹ்மதிகள் தனது வட்டாரத்தில் செய்து கொண்டிருக்கிறார்கள்.

எனவே மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்கான சின்னச்சின்ன விளக்குகள் எரிந்து கொண்டு தான் இருக்கின்றன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இஸ்ராயீல் சமுதாயத்தில் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக ஒவ்வொரு நேரத்திலும் ஆயிரக்கணக்கான நபிமார்களும், முஜத்தித்மார்களும் இருந்திருக்கிறார்கள். நபியாக இருக்கக்கூடியவர், கலீஃபாவாகவும், முஜத்தித் ஆகவும் அழைக்கப்பட்டனர். பிறகு இஸ்லாத்தில் ஆயிரக்கணக்கில் ஏன் இருக்க முடியாது? இது எனது வார்த்தைகள் ஆகும். ஏறக்குறைய விஷயம் இதுதான். ஒவ்வொரு நூற்றாண்டிற்கும் முஜத்தித் இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு முன்பு 12 நூற்றாண்டுகள் வரை 12 முஜத்தித்துகள் தோன்றியிருக்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 14வது நூற்றாண்டில் தோன்றிய 13 வது முஜத்தித் ஆவார்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் ஒவ்வொரு பகுதியிலும் முஜத்தித்துகள் தோன்றினார்கள் என்பது தெரிய வருகிறது. இந்த வெறும் 12 முஜத்தித்துகள் மட்டும் கிடையாது. மாறாக ஒரு சில சமயங்களில் பல முஜத்தித்மார்கள் தோன்றியுள்ளார்கள். எங்கெல்லாம் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்கான அவசியம் ஏற்பட்டதோ அங்கெல்லாம் அல்லாஹ் முஜத்தித்மார்களை எழுப்பினான். ஆனால் மீண்டும் ஒரு கேள்வி எழுகிறது. இந்த விஷயத்தை தமது பிரசுரங்களிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியிருக்கின்றார்கள்.

பிறகு நாம் 12 முஜத்தித்துகள் என்று ஏன் கணக்கிடுகிறோம். அரபிகளில் அதிகமானோர் 12 முஜத்தித்துகள் மட்டுமே தோன்றினர் என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் இந்தியாவில் வரிசைப்படி கணக்கிடுகின்ற முஜத்தித்துகளை முஸ்லிம்களில் அதிகமானோர் ஏற்றுக் கொள்வதில்லை. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இதற்கு ஒரு அழகான பதிலை கூறினார்கள். இந்தியர்கள் 12 முஜத்தித்மார்களை முழு உலகிற்காகவும் வந்தவர்கள் என்று கூறுகின்றனர். இது தவறாகும். முஜத்தித்களைப் பற்றிய தவறான எண்ணம் மக்கள் மனதில் உள்ளது. அதாவது ஒரு முஜத்தித் முழு உலகிற்காகவும் தோன்றுகிறார் என்று நினைக்கின்றார்கள். இது மிகவும் தவறாகும். உண்மையான விஷயம் என்னவெனில், ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு பகுதியிலும் அல்லாஹ் முஜத்தித்துகளை தோற்றுவிக்கிறான். ஆனால் மக்கள் நாடு அல்லது சமுதாய அடிப்படையில் தனது நாட்டின் அல்லது தனது சமுதாயத்தின் முஜத்தித்தை உலகம் அனைத்திற்காகவும் வந்த முஜத்தித் என்று நினைக்கின்றார்கள்.

ஆனால் இஸ்லாம் முழு உலகிற்காகவும் வந்த மார்க்கமாகும். எனவே பல்வேறு நாடுகளிலும் பல்வேறு இடங்களிலும் பல்வேறு முஜத்தித்துகள தோன்ற வேண்டிய அவசியம் உள்ளது.

ஹஸ்ரத் ஸையத் அஹ்மத் பரேல்வி அவர்கள் முஜத்தித்தாக இருந்தார்கள். ஆனால் முழு உலகிற்காகவும் அவர் வரவில்லை. மாறாக அவர் இந்தியவிற்காக மட்டும் வந்தவர்கள் ஆவர். அவர் முழு உலகிற்காகவும் வந்த முஜத்தித் என்று கூறினால் அவர் அரபு நாட்டிற்கு என்ன நேர்வழியைக் காட்டிக் கொடுத்தார்? எகிப்தியவர்களுக்கு என்ன நேர்வழியைக் காட்டிக் கொடுத்தார். அவர் ஈரானுக்கு என்ன நேர்வழியை வழங்கினார்? அவர் ஆப்கானிஸ்தானுக்கு என்ன நேர்வழியை வழங்கினார்? இந்த நாடுகளின் நேர்வழிக்காக அவர் எந்த வேலையையும் செய்யவில்லை.

ஆனால் இவர்களது நாட்டின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் இவர்களிலும் வஹி இறங்கப் பெறாதவரும், இல்ஹாம் இறங்கப் பெறாதவரும் இருந்திருக்கிறார்கள்.

எவர் தனது நாட்டிற்கு வழிகாட்டுதலுக்கான கடமையை நிறைவேற்றினாரோ அவர்களும் தத்தமது இடங்களில் முஜத்தித் ஆவார்கள். அவர்கள் அறிவிப்பு செய்தாலும் சரி, அறிவிப்பு செய்யாவிட்டாலும் சரி யாரெல்லாம் வழிகாட்டுதலுக்கான கடமையை நிறைவேற்றினார்களோ சீர்திருத்தத்திற்கான கடமையைச் செய்தார்களோ அவர்களும் தத்தமது இடத்தில் முஜத்தித் ஆவார்கள். இவர்களும் அதாவது இந்தியாவில் வந்தவர்களும் முஜத்தித் ஆவார்கள். வித்தியாசம் என்னவென்றால், சிலர் பெரிய முஜத்தித்தும் சிலர் சிறிய முஜத்தித்தும் ஆவார்கள்.

இந்தியாவில் வந்த முஜத்தித்துகளுக்கு என்ன முக்கியவத்துவம் உள்ளதென்றால் அவர்கள் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வரவேண்டிய நாட்டில் வந்தார்கள். இதன் மூலமாக அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கு வழிகாட்டிகளாக இருந்திருக்கிறார்கள். 14ம் நூற்றாணடின் முஜத்தித்தாக ஹஸ்ரத் மஸீஹ், மஹ்தி வரப்போகின்றார் என அறிவப்பு செய்யக்கூடியவர்களாக அவர்களின் வருகை இருந்தது.

இல்லையென்றால், இவர்கள் மட்டும் தான் முஜத்தித். மற்ற உலகின் முஜத்தித்துகளின் வருகையிலிருந்து காலியாக உள்ளது என்று நாம் எண்ண முடியாது. இல்ஹாமுடன் மார்க்கத்தைப் புதுப்பிக்கக்கூடிய ஒவ்வொருவரும் ஆன்மீக முஜத்தித் ஆவார்கள். இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கான ஏதாவது ஒரு புதுப்பிக்கக்கூடிய வேலை செய்பவர் முஜத்தித் ஆவார். அவர் ஆன்மீக முஜத்தித்தாக இல்லையென்றால் நான் உதாரணமாக கூறியது போன்று, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: ஔரங்கசீப் பாதுஷாவாக இருந்தார். அவரும் முஜத்தித் ஆவார். ஆனால் அவர் எனக்கு இல்ஹாம் இறங்குகிறது என்று வாதம் செய்யவில்லை.

எனவே இதுதான் முஜத்தீன்களுடைய உண்மைத்தன்மையாகும். ஒரு நேரத்தில் பலர் இருப்பார்கள். மேலும் ஆயிரக்கணக்கில் கூட இருப்பார்கள்.

ஆனால் கலீஃபா ஒரே நேரத்தில் ஒருவர் மட்டும் தான் இருப்பார். ஒரே சமயத்தில் ஒருவர் மட்டும் இருப்பதால் அவரது அந்தஸ்து உயர்ந்ததா? அல்லது ஒரே சமயத்தில் பலர் இருப்பது உயர்வனதா?

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் கிலாஃபத்திற்கு தான் அந்தஸ்து வழங்கியிருக்கிறார்கள். நுபுவ்வத் வழியில் கிலாஃபத் ஏற்படும். முஜத்திய்யத்திற்கு எந்த முக்கியத்துவமும் வழங்கவில்லை.

முஜத்தித்துகள் அனுப்பப்படுவதைப் பற்றி ஹதீஸில் கூறப்பட்டுள்ள வார்த்தைகள் இதுவாகும். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முஜத்தித்தை அனுப்புவான். அவர் அந்த உம்மத்தின் மார்க்கத்தைப் புதுப்பிப்பார்.

இங்கு மொழியாக்கத்தில் ஒருமை கையாளப்பட்டுள்ளது. ஆனால் இங்கு பன்மையும் அடங்கும். ஏனென்றால் அரபி அறிஞர்கள் கூறுகிறார்கள்: மை யுஜத்திது லஹா தீனஹா என்பதில் மன் பன்மைக்குப் பயன்படுத்தப்படும். உம்மத்தில் மார்க்கத்தைப் புதுப்பிப்பார். உம்மத்தில் ஏற்படக்கூடிய பிளவுகளை சீர்திருத்துவார். மார்க்கத்தின் மீது நேசம் மற்றும் தியாகத்தின் தரத்தை உயர்த்துவார்.

ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித் வருவார் என்று கூறப்பட்டுள்ளது. அல்லது ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தீன்கள் வருவார் என்று கூறப்பட்டுள்ளது. இதனை நுபுவ்வத் வழியில் கிலாஃபத் என்ற ஹதீஸுடன் சேர்த்துப் படித்தால், அதில் முதலில் நுபுவ்வத்; பிறகு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் ஏற்படும். பிறகு இந்த அருள் எடுக்கப்பட்ட பிறகு கஷ்டம் கொடுக்கக்கூடிய அரசர்கள் தோன்றுவர்.

எனவே எப்பொழுதுவரை நுபுவ்வத் வழியில் கிலாஃபத் இருந்ததோ அப்போது வரை சஹாபாக்களும் உயிருடன் இருந்தார்கள். மாறாக தாபியீன்கள், தப தாபியீன்களும் இருந்தார்கள். ஒரு நூற்றாண்டும் முடிந்தது. அப்பொழுது வரை மார்க்கத்தில் அவ்வளவு குழப்பங்கள், பிளவுகள் ஏற்படவில்லை. அதுவரை முஜத்திதீன்களைப் பற்றி கூறவில்லை. நூற்றாண்டு முடிந்த பிறகு முஜத்தித் தோன்றுவார் என்று கூறினார்கள். முதல் நூற்றாண்டில் முஜத்தீன்களுடைய அவசியம் இல்லாமல் இருந்தது.

முஜத்தித்துகளின் வருகை பற்றிய முன்னறிவிப்பு நூறு ஆண்டுகள் கழிந்த பிறகு தான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே இது ஒரு வகையில் கிலாஃபத் முடிவடைவதற்கு முன்னறிவிப்பாக இருந்தது. மேலும் பித்அத்துகளை இஸ்லாத்தில் நுழைவதற்கான முன்னறிவிப்பாகவும் அது இருந்தது. அதிக அளவு பித்அத்துகள் நுழைந்து விடும். பல பிரிவுகள் ஏற்பட்டு விடும். எனவே இதன் சீர்திருத்தத்திற்காக முஜத்திதீன்கள் தோன்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிறகு முஜத்திதீன்களுடைய தொடர்ச்சி இதுபோன்ற சீர்திருத்தத்திற்காக தொடர ஆரம்பித்தது.

நான் கூறியது போன்று, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எழுதியிருக்கின்றார்கள்: மேலும் எனது ஆதாரத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். அதாவது ஒரே சமயத்தில் பல்வேறு முஜத்திதீன்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களைப் பற்றி, உன்னதமான முஜத்தித் பற்றி, கடைசி ஆயிரமாவது ஆண்டின் முஜத்தித் பற்றி நற்செய்தி கூறினார்களோ, பிறகு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் என்ற நற்செய்தியினையும் கூறி விட்டு அமைதியாகி விட்டார்கள்.

முஜத்திதீன்களுடைய வேலை இறைவனிடமிருந்து வஹியைப் பெற்று தனது சுற்றுவட்டாரத்தில் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்கும், அந்த மார்க்கத்தைப் புதுப்பித்தலும் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தோன்றும் வரைக்கும் தான் ஆகும். மஹ்தி, மஸீஹ் தோன்றிய பிறகு அவரே 14ம் நூற்றாண்டின் முஜத்தித்தும், கடைசி ஆயிரமாவது ஆண்டின் முஜத்தித்தும் ஆவார்கள். பிறகு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் அமைப்பு தான் இருக்க வேண்டும்.

**இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத்(அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

**அது மிகப்பெரிய வல்லமை ஆகும். அல்லாஹ், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய உண்மைத்துவத்திற்குப் பல்வேறு ஆன்மாக்களுக்கு நேர்வழி காட்டிக் கொண்டே இருப்பான். அதில் எந்தவித தொடர்பு இல்லாதவர்களை, பலதரப்பட்ட மார்க்கங்களைக் கொண்டவர்களுக்கு கனவில் கலீஃபாக்களைக் காட்டி,கிலாஃபத் அமைப்புதான் அசல் அமைப்பு ஆகும். இதனுடன் இணைந்துதான் மார்க்கத்தைப் புதுப்பிக்கக்கூடிய வேலை நடைபெற முடியும் என உறுதிபடுத்துகின்றான்.**

திருக்குர்ஆனிலும், ஹதீஸிலும் முஜத்தித்துகளைப் பற்றிய செய்தியை காண முடியாது. ஆனால் கிலாஃபத்தைப் பற்றி கண்டிப்பாக காணலாம். இதனைப் பற்றி கடந்த குத்பாவிற்கு முன்புள்ள குத்பாவில் அதாவது மே 27 -ல் கொடுத்த குத்பாவில் ஆயத் இஸ்திக்லாப் மூலம் விளக்கமளித்தேன்.

எனவே முஜத்திய்யத் தற்பொழுது காத்தமுல் குலஃபா, கடைசி ஆயிரம் வருடத்தினுடைய முஜத்தித்துடைய தோற்றமாகவும் அதனுடைய நிழலாகவும் செயல்படுகிறது. அதனுடைய உண்மையான நிழல் கிலாஃபத் அமைப்பு ஆகும். அது தான் மார்க்கத்தைப் புதுப்பிக்கிறது; புதுப்பிக்கவும் செய்யும். இன்-ா அல்லாஹ்.

எனவே அடுத்த நூறறாண்டிற்கான முஜத்தித் எப்பொழுது வருவார்? அவர் வருவாரா? வரமாட்டரா? அவர் வர முடியுமா? வர முடியாதா? என்ற விவாதத்திற்குப் போகாமல், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாதத்தில் முழுமையான நம்பிக்கை வைத்து அன்னாருடைய நோக்கத்தினை நிறைவேற்ற வேண்டும். தனது சீர்திருத்தத்தின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். தனது சந்ததிகளின் சீர்திருத்தத்தின் பக்கமும் கவனம் இருக்க வேண்டும்.

தன்னையும் பித்அத்துகளிலிருந்து பாதுகாக்க வேண்டும். தனது சந்ததிகளையும் பித்அத்துகளிலிருந்து பாதுகாக்க வேண்டும். உண்மையான இஸ்லாமிய போதனைகளின்படி அமல் செய்ய வேண்டும். அதனைப் பரப்ப வேண்டும். இந்தக் கால கட்டத்தில் (இ-ாஅத்) வெளியீட்டுப் பணிகள் பல வழிகளில் நடைபெறுகிறது. புத்தகங்கள் மூலமாக, பிரசுரங்கள் மூலமாக, இன்டர்நெட் மூலமாக, டி.வி. சேனல்கள் மூலமாக நடைபெறுகிறது. எனவே நம் மீது இந்தப் பணி மேலும் அதிகமாகச் செய்யக்கூடிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. இந்த வேலைகளைச் செய்வதற்கு நாம் முழுமையாகக் கவனம் செலுத்த வேண்டும். இஸ்லாத்தில் நுழைந்துள்ள பித்அத்துகளையும் தவறான போதனைகளையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் களைந்துள்ளார்கள். மேலும் அஹ்மதிய்யா கிலாஃபத் இதே பணியை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் முழுமையாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன் ஒரு கடிதம் பார்த்தேன். அதில் ஒரு அரபி எழுதுகிறார். முல்லாக்களுடைய செயல்கள் மற்றும் பல்வேறு விதமான பித்அத்துகள், தவறான போதனைகள், தவறான கொள்கைகள் மூலம் என்னுடைய உள்ளம் நிம்மதியிழந்திருந்தது. தற்செயலாக எனக்கு M.T.A Channel கிடைத்தது. அதில் நான் இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பார்க்க முடிந்தது. அதில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்தது பற்றி தெரிய வந்தது. அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். உயிருடன் வானத்தில் இல்லை என்பது தெரிய வந்தது. இதனைக் கேட்ட பிறகு உள்ளம் திருப்தி அடைந்தது.

**அவர் எழுதுகிறார்:** என்னுடைய உள்ளம், ஆரம்பத்திலிருந்தே இந்த வி-யத்தை அதாவது ஒரு மனிதர் 2000 வருடமாக வானத்தில் உயிருடன் இருக்கிறார் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை.

**பின்னர் அவர் எழுதுகிறார்:** நான் ஜமாஅத்தில் இணைகிறேன். எனவே இவைகள் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத்(அலை) மூலமாக உலகத்திற்குத் தெரிய வருகிறது.

நூறு வருடங்கள் முடிந்த பிறகு எந்த ஒரு முஜத்தித்திற்கும் அவசியம் இல்லை. மாறாக, முழுமையாக 1000 வருடங்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்தான் முஜத்தித் ஆவார்கள். இதைப்பற்றி அவர்களே கூறியிருக்கிறார்கள். இதற்காக அவர்களுடன் ஒன்றியிருக்க வேண்டியதுள்ளது. இதன் மூலம் உண்மையான போதனையை உலகத்திற்குத் தெளிவாக எடுத்துரைக்க முடியும். இந்தக் காலகட்டத்தின் இமாம், மஸீஹ் மற்றும் மஹ்தி கடைசி ஆயிரம் ஆண்டின் முஜத்தித், அவர்களுக்கு அல்லாஹ் இதற்கான வழிவகைகளை ஏற்பாடு செய்துள்ளான். உலகத்தின் தர்பியத்திற்காக, நமது பணி தூதுச் செய்தியைக் கொண்டு சேர்ப்பது மட்டும் தான். எனவே இந்த அழகிய

போதனையை தன் மீது ஏந்திக் கொண்டு அதனைப் பரப்ப முயற்சி செய்யக்கூடிய ஒவ்வொருவருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மற்றும் அன்னாருடைய கிலாஃபத்திற்கு உதவி புரியக்கூடியவர் ஆவார். மேலும் புதுப்பிப்பதற்கான வேலையைத் தான் செய்கிறார். எனவே நாம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்தப் பணிகளை மேலும் அதிகமாக செய்யக்கூடியவர்களாக ஆக வேண்டும். மேலும் இஸ்லாத்தின் வெற்றியைக் காணக் கூடியவர்களாக ஆவோமாக! அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் இதற்கான வாய்ப்பினைத் தந்தருள்வானாக! ஆமீன்.

தற்பொழுது ஒரு வருத்தத்திற்குறிய செய்தி, ஜுமுஆ தொழுகைக்குப்பிறரு நான் ஒரு ஜனாஸா தொழவைப்பேன். ஜனாப் கைருத்தீன் பரூ சாஹிப், இவர் இந்தோனேஷியாவைச் சேர்ந்தவராவார். இவர் 1947 -ல் இந்தோனேஷியாவில் மி–ானில் பிறந்தார். 1971 -ல் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைவதற்குரிய நல்வாய்ப்பைப் பெற்றார். 1973 -ல் ஜாமியா அஹ்மதிய்யா ரப்வாவில் சேர்ந்தார்கள். ஃபஸ்ல் காஸ் வகுப்பில் சேர்ந்தார்கள். பிறகு உருது மொழி கற்றார்கள். தொடர்ந்து முயற்சி செய்து 1982 -ல் ஜாமியாவிலிருந்து –ாஹித் பட்டம் பெற்று வெற்றி பெற்றார்கள். முதலில் ஜுன் 1982 -ல் இந்தோனேஷியாவில் முபல்லிக் ஆக பணி நியமணம் செய்யப்பட்டார்கள். பிறகு தனது சொந்த ஊரான மீதானில் பணி நியமணம் செய்யப்பட்டது. பிறகு 1983 -ல் நான்கு மாதம் மலேசியாவிற்குச் சென்று பணியாற்றினார்கள். அங்கு கோலாலம்பூரில் மஸ்ஜித் கட்டுமானப் பணியைச் செய்தார்கள். மலேசியாவிலிருந்து திரும்பிய பிறகு 1993 -ல் இந்தோனேஷியாவில் பல்வேறு ஜமாஅத்துகளில் முபல்லிக் ஆக பணியாற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. 1993 முதல் 1998 வரை பிலிப்பைன்ஸில் மி–னரி இன்சார்ஜ் ஆக பணியாற்றினார்கள். 1998 முதல் பபோ நியுகினியில் முபல்லிக் ஆக பணியாற்றினார்கள். வஃபாத் ஆகும் வரை அங்கேயே பணியாற்றினார்கள்.

ஜுன் 6 -ம் தேதி 2011 -ம் வருடம் பல்வேறு நோய்க்கு ஆளாகி மரணம் அடைந்தார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

கைருதீன் பரூ சாஹிப் நேர்மையான, கட்டுப்படக்கூடிய, நன்றியுணர்வுடைய மனிதர் ஆவார். வக்ஃபின் உணர்வோடு பணியாற்றிய முபல்லிக் ஆவார்கள். தப்லீகில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார்கள். இவர் மூலமாக பல ஜமாஅத்துகள் உருவாகின. பல பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. ஜமாஅத் எந்த பொறுப்பைக் கொடுத்தாலும் மகிழ்ச்சியுடனும் பொறுப்புணர்வுடனும் செய்யக்கூடியவர் ஆவார். மூஸி ஆகவும் இருந்தார். அல்லாஹ்வின் அருளால் பல திருமணங்கள் முடித்திருந்தார். தற்பொழுது இவருக்கு 3 மனைவிமார்களுடன் மொத்தம் 14 பிள்ளைகள் உள்ளனர். இதில் 8 ஆண் மக்களும் 6 பெண் மக்களும் ஆவர். அல்லாஹ் இவருடைய குடும்பத்தாருக்கு பொருமையை வழங்குவானாக! இவருடைய தர்ஜாவை மேம்படுத்துவானாக! மேலும் நல்ல சேவைகள் செய்யக்கூடியவர்கள் இவருடைய சந்ததியிலிருந்து உருவாகிக் கொண்டேயிருக்கட்டுமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 10.06.2011**

Translated by : **Maulvi N. ZIYAVUL HAQ H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**